Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஐப்பசி 13 | (29 - 10 - 1992) | வியாழக்கிழமை | ஓசை 254

## மனிதநேயக் குழுக்கள் ஊடாக மருந்திற்கு விண்ணப்பிக்கத் தடை

அரச சார்பற்ற சர்வதேச அமைப்புகள் மற்றும் மனிதநேயக் குழுக்கள் ஊடாக யாழ். குடாநாட்டிற்குத் தேவையான மருந்துப்பொருள்களுக்கு விண்ணப்பம் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான பணிப்புரை சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் பொ. இரத்தினசபாபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. யாழ். பிராந்தியத்திற்குத் தேவைப்படும் வாகனங்கள், மருந்து வகைகள், மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றிற்கு மருத்துவப் பொருள்கள் விநியோகப் பிரிவுக்கு விண்ணப்பிக்கும் போது சுகாதாரம் மற்றும் (4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். குடாநாட்டில் ராணுவ நடவடிக்கை

# எந்த நேரமும் ஆரம்பிக்கப்படலாம்

### ஜெரிசில்வா பதவிஏற்றார்

மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா இராணுவத் தலைமையகத்தில் பிரதம அதிகாரியாக கடந்த வெள்ளியன்று பதவி (4 ஆம் பக்கம் பார்க்க)

## உயிர் காக்கும் மருந்துகள் மீது ஜே. ஓ. சி. தீவிர கட்டுப்பாடு

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள்பணிமனை கொழும்புக்கு அனுப்பிய மருந்துப் பட்டியலில் உயிர்காக்கும் மருந்துகளின் வகை தொகையை கூட்டு நடவடிக்கைத் தலைமையகம் (ஜே ஓ.சி) குறைத்து வழங்க அனுமதித்துள்ளது. 1992 தேவைப்பட்டியலிலேயே ஜே. ஓ. சி. மருந்து வகைகளைக் கடுமையாகக் கட்டுப்படுத்தியுள்ளது என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் பொ. இரத்தினசபாபதி தெரிவித்தார்.

வருட ஆரம்பத்திலேயே மருந்துத் தேவைகளை யாழ். பிராந்திய சேவைகள் பணிமனை கொழும்பு சுகாதார சேவை அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தது.

குளக்காசிலின், அமொக்சிசிலின் கூட்டுக் குளிகைகள், பென்சலின் வில்லைகள் போன்றஉயிர்முறிப்புகொல்லி (Antibiotics) ஆகிய பிரதான மருந்து வகைகளின் அள்வைக் குறைத்தே யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. 58,000 குளக்காசிலின் கூட்டுக் குளிகைகள் கேட்கப்பட்டன ஆனால் 14,000 குளிகைகளே அனுப்பப்பட்டுள்ளன. 5, 35, 000 அமொக்சிசிலினுக்குப் பதிலாக 2000 குளிகைகளே அனுப்பப்பட்டுள்ளன மேலதிகமாகச் சக்தி குறைந்த அம்பிசிலின் குளிகைகள் 25,000 அனுப்பப்பட்டுள்ளன 1, 970, 000 பென்சிலின் வில்லைகளுக்குப் பதிலாக 5,85,000 வில்லைகளே அனுப்பப்பட்டுள்ளன என்று டாக்டர் இரத்தினசபாபதி மேலும் தெரிவித்தார்.

நாய் கொல்லி மருந்தான (4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசஅதிபர் கொழும்பு பயணம்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து 'குமாரி' கப்பல் மூலம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும், உணவுக் கூட்டுறவுத்துறை கணக்காளரும் கொழும்பு நோக்கி புறப்பட்டனர்.

மன்னாரில் உணவுப்பொருள்களை இறக்கி முடித்து விட்டு பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்த இக்கப்பலில் மேற்படி அதிகாரிகள் திருக்கோணமலைக்குச் சென்று கொழும்பு சென்றடைவர்.

குமாரி கப்பல் திருக்கோணமலையில் மா ஏற்றிக்கொண்டு மீண்டும் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும். இதே வேளை பருத்தித்துறை துறைமுகத்தில் நிற்கும் குமண கப்பல் எதிர் வரும் 30 ஆம் திகதி கொழும்புக்குப் புறப்படும். இக்கப்பலில் வெளியூர் தபால்களும் எடுத்துச் செல்லப்படும்

மற்றும்உரவகைகளை ஏற்றி வந்த மரினால் கப்பல் தற்போது காங்கேசன் துறையில் தரித்து நிற்கிறது. (82)

## விமான குண்டுவீச்சும் தொடரும் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை நடத்தத் தாம் திட்டமிட்டிருப்பதாகவும், கடந்த பத்து நாட்களாக புலிகளைப் பலவீனப்படுத்த விமானத் தாக்குதல் நடத்தப்படுவதாகவும், எந்தவேளையிலும் புலிகளுக்கு எதிரான தரைமார்க்க தாக்குதல் திடீர் என ஆரம்பிக்கப்படலாம் எனவும் சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக பி. பி. ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

செய்தியாளர்களிடம் பேசிய இராணுவ அதிகாரி வடக்கில் யாழ் குடாநாட்டின் மீது விமானத்தாக்குதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், விடுதலைப் புலிகளின் நிலை மீது தான் இத்தாக்குதல் நடைபெறுவதாகவும், பொதுமக்கள் அவ்விடத்திலிருந்து வெளியேறும்வண்ணம் துண்டுப்பிரசுரம் வெளியிட்ட பின்னர் தான் குண்டுத் தாக்குதல் நடைபெறுவதாகவும் தெரிவித்தார்.

மீண்டும் கூட்டுப்படை தலைமை பொறுப்பேற்ற பின்னர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தத் தாம் திட்டம் தீட்டியுள்ளதாகவும், விமானத் தாக்குதல் அவர்களைப் பலவீனப்படுத்துவதற்கு நடத்தப்படுவதாகவும், மிக விரைவில் அவர்களுக்கு எதிரான ஏனைய தாக்குதல்கள் நடைபெறும் எனவும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார் இதேவேளை பருத்தித்துறைக்கும், தொண்டமானாறுக்கும் இடையே விமானத்தாக்குதல் ஒன்றைத் தாம் நடத்திவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

இராணுவ உயர் அதிகாரிகளின் இழப்பை விடுதலைப் புலிகள் பயன்படுத்தி பல தாக்குதல்களைமேற்கொண்டு வெற்றிபெற்றுள்ளனர் இராணுவ அதிகாரிகளின் இழப்பால் ஏற்பட்ட தளர்ச்சியை புலிகள் நன்றாகப் பயன்படுத் (4ஆம் பக்கம் பார்க்க)

## பல்வேறு தொற்று நோய்கள் குடாநாட்டில் பரவுகின்றன

### சுகாதார சேவை பிராந்திய பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

பல வகைப்பட்ட தொற்று நோய்கள் யாழ். குடாநாட்டில் பரவுகின்றன. மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் புதிதாகத் தொழுநோய் கண்டிருப்பவர்

சுகாதாரப் பணிமனைப் பேச்சாளர் தெரிவித்தார்

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய பணிப்பாளர் டாக்டர் பொ. இரத்தினசபாபதி நேற்றுப் பிற்பகல் நடத்திய

க்கை 110 த்தாக இருந்தது. 1992 ஒக்டோபர் வரை யாழ். பிராந்தியத்தில் 67 பேருக்குப் புதிதாக இந்நோய் கண்டிருக்கிறது. மானிப்பாய்க்கு அடுத்தபடியாக யாழ் மாநகர சபை எல்லைக்குள் தொழு நோயா

## 'குமண'வில் பௌதிக

## பலாலியில் படை குவிப்பு

## விமான ஓட்டம் அதிகரிப்பு

ளைக் கடுமையாகக் கட்டுப்படுத்தியுள்ளது என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் பொ. இரத்தினசபாபதி தெரிவித்தார்.

(Antibiotics) ஆகிய பிரதான மருந்து வகைகளின் அளவைக் குறைத்தே யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. 58,000 குளக்காசிலின் கூட்டுக் குளிகைகள் கேட்கப்பட்டன 5,85,000 வில்லைகளே அனுப்பப்பட்டுள்ளன என்று டாக்டர் இரத்தினசபாபதி மேலும் தெரிவித்தார்.

நோய் கொல்லி மருந்தான

(4 ஆம் பக்கம் பார்க்க)

படி அதிகாரிகள் திருக்கோணமலைக்குச் சென்று கொழும்பு சென்றடைவர்.

குமாரி கப்பல் திருக்கோணமலையில் மா ஏற்றிக்கொண்டு மீண்டும் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும். இதே வேளை பருத்தித்துறை துறைமுகத்தில் நிற்கும் குமண கப்பல் எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்புக்குப் புறப்படும். இக்கப்பலில் வெளியூர் தபால்களும் எடுத்துச் செல்லப்படும்

மற்றும் உரவகைகளை ஏற்றி வந்த மரினால் கப்பல் தற்போது காங்கேசன் துறையில் தரித்து நிற்கிறது. (82)

பி. பி. ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

செய்தியாளர்களிடம் பேசிய இராணுவ அதிகாரி வடக்கில் யாழ் குடாநாட்டின் மீது விமானத்தாக்குதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், விடுதலைப் புலிகளின் நிலை மீது தான் இத்தாக்குதல் நடைபெறுவதாகவும், பொதுமக்கள் அவ்விடத்திலிருந்து வெளியேறும்வண்ணம் துண்டுப்பிரசுரம் வெளியிட்ட பின்னர் தான் குண்டுத் தாக்குதல் நடைபெறுவதாகவும் தெரிவித்தார்.

மீண்டும் கூட்டுப்படை தலைமை பொறுப்பேற்ற பின்னர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தத் தாம் திட்டம் தீட்டியுள்ளதாகவும், விமானத் தாக்குதல் அவர்களைப் பலவீனப்படுத்துவதற்கு நடத்தப்படுவதாகவம், மிக விரைவில் அவர்களுக்கு எதிரான ஏனைய தாக்குதல்கள் நடைபெறும் எனவும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார் இதேவேளை பருத்தித்துறைக்கும், தொண்டமானாறுக்கும் இடையே விமானத்தாக்குதல் ஒன்றைத் தாம் நடத்திவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

இராணுவ உயர் அதிகாரிகளின் இழப்பை விடுதலைப் புலிகள் பயன்படுத்தி பல தாக்குதல்களைமேற்கொண்டு வெற்றிபெற்றுள்ளனர் இராணுவ அதிகாரிகளின் இழப்பால் ஏற்பட்ட தளர்ச்சியை புலிகள் நன்றாகப் பயன்படுத்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பல்வேறு தொற்று நோய்கள் குடாநாட்டில் பரவுகின்றன

## சுகாதார சேவை பிராந்திய பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

பல வகைப்பட்ட தொற்று நோய்கள் யாழ். குடாநாட்டில் பரவுகின்றன. மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் புதிதாகத் தொழுநோய் கண்டிருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. காட்டுப்புலம், திருவடிநிலையம், மூளாய், ஆகிய கிராமங்களிலேயே இந்நோய்க் குறிகள் உள்ளவர்கள் சிலரைத் தமது ஆய்வின் போது கண்டிருப்பதாக யாழ் பிராந்திய சுகாதாரப் பணிமனைப் பேச்சாளர் தெரிவித்தார்

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய பணிப்பாளர் டாக்டர் பொ. இரத்தினசபாபதி நேற்றுப் பிற்பகல் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிககப்பட்டது.

காரைநகர் களபூமியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் ஒரு சிலரிடமும் இந்நோய் காணப்படுகிறது 1991 இல் தொழுநோயாளரின் எண்ணிக்கை 110 த்தாக இருந்தது 1992 ஒக்டோபர் வரை யாழ். பிராந்தியத்தில் 67 பேருக்குப் புதிதாக இந்நோய் கண்டிருக்கிறது. மானிப்பாய்க்கு அடுத்தபடியாக யாழ் மாநகர சபை எல்லைக்குள் தொழு நோயாளரின் எண்ணிக்கை அதிகம். யாழ். நகரில் 37 பேருக்கு இந்நோய் கடுமையாகப் பீடித்துள்ளது என்றார் அவர்.

இந்நோய் பற்றி அச்சப்படத் தேவையில்லை, ஆரம்ப அறிகுறிகளை கண்டதும் தகுதிவாய்ந்த மருத்துவரிடம் சிகிச்சை பெற்றால் பூரண குணமடையலாம், காற்றோட்டமில்லாத குடிசைகளில் நெருக்கமாக வாழ்வதால் ஒருவர் மூச்சை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 'குமண'வில் பௌதிக விடைத் தாள்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தரத்திற்கான பௌதிகவியல் மீள் பரீட்சையின் விடைத்தாள்கள் 'குமண' கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன. அத்துடன் ஆண்டு ஒன்பதுக்கான தொழில் கல்விச் சான்றிதழ் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களும் அனுப்பிவைக்கப் படவுள்ளன. (பா)

# பலாலியில் படை குவிப்பு | விமான ஓட்டம் அதிகரிப்பு

(நமது நிருபர்)

பலாலி விமானப்படைத் தளத்தில் பெருமளவு துருப்புக்களும் ஆயுத தளபாடங்களும் கடந்த இரு தினங்களாககுவிக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதே வேளை வடபகுதி வான்பரப்பில சிறிலங்கா விமானப்படையினரின் நடமாட்டம் அதிகரித்துள்ளன.

தென்பகுதி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்தே பெருமளவு ஆயுதத்தளபாடங்களும் துருப்புக்களும் இரவு பகலாக பலாலியில் குவிக்கப்பட்டு வருகின்றன.

இப்பணியில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான வை-12 விமானமும் அவ்ரோ விமானங்களும் கடந்த 48மணி நேரமாக இடைவிடாது ஈடுபடுத்தப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கடந்த சில தினங்களில் இராணுவத்தின்

# இழப்பு அதிகமென்பது முற்றிலும் பிழையானது

-கேணல் சரத் முனசிங்கா

(கொழும்பு)

கடந்த சில தினங்களாக விடுதலைப் புலிகள் பாதுகாப்புப் படையினர் மீது நடத்தி வரும் தாக்குதல் மூலமான இழப்பு முன்னைய காலங்களிலும் பார்க்க கூடுதலானது என்ற கூற்று முற்றிலும் பிழையானது என்று சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

# பாதுகாப்பு அமைச்சர் மட்டக்களப்பு விஜயம்

கிழக்கின் பாதுகாப்பு நிலைமையை ஆராய சிறிலங்கா பிரதமரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் இருந்து ராணுவத்தை வாபஸ் பெறத் திட்டம்

## பாதுகாப்பு கடமையில் பொலிஸார்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் காவல் கடமையிலிருந்து இராணுவத்தினர் விடுக்கப்பட்டு அ இடங்களில் பொலிஸார் நிறுத்தப்படுவதாகவும், பதற்றம் கூடிய பகுதிகளில் மட்டும் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுவதாகவும் தெரியவருகின்றது கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்களை மற்கேள்காட்டி வெளியிடிருக்கும் இச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; இவ்வாறுவிடுவிக்கப்படும் இராணுவத்தினரில்பெரும்பாலோர் தேவைப்பட்டால் எதிர்வரும் வாரங்களில் குடாநட்டின் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கும் பயன்படுத்தப்படலாம் என்றும் குறிப்பிடப்படுகிறது.

# தேசிய புலனாய்வுப் பிரிவை கலைத்துவிட அரசு முடிவு

(கொழும்பு)

சிறிலங்கா பொலிஸ் திணைக்களத்தின் கீழ் உள்ள என். ஐ. டி. எனப்படும் சிறிலாங்காவின் தேசிய புலனாய்வுப் பிரிவு கலைக்கப்படவுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்புப் படையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் மேற்படி புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றி வருபவர்கள் அனைவரும் விரைவில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உருவாக்கப்படவுள்ள புதிய புலனாய்வுப் பிரிவில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

அதே சமயம் முன்னாள் பிரதி பொலிஸ் அதிபர் பிரேமதாசா உடுகம்பொலவின் கீழ் இயங்கிவந்த பி. என் ஓ. எனப்படும் விசேட பொலிஸ் படைப்பிரிவு கலைக்கப்படும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

மேலும் விசேட பொலிஸ் படைப் பிரிவு கலைக்கப்படுவதற்கு அதில் தற்போது அங்கம் வகிப்பவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள் எனவும் தெரியவருகிறது. இருந்த போதும் அவ்வமைப்பு கலைக்கப்பட்டு அங்கு செயற்பட்டு வந்தவர்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்படுவர் எனவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலை படுகொலை

# லெப். குடலிகம மீது நீதிமன்றம் குற்றச்சாட்டு

கொக்கட்டிச்சோலை பகுதியில், தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு இராணுவத்தினரே பொறுப்பு என்று இராணுவ நீதி மன்றம் கூறியுள்ளது.

இப் படுகொலை நடந்த சமயம் அப்பகுதி இராணுவ முகாமிற்கு பொறுப்பதிகாரியாக இருந்த லெப், குடலிகம இச் சம்பவத்திற்கான குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார் எனினும், லெப். குடலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வலிவடக்கில்எறிகணைவீச்சு பொதுமக்கள்பலர் படுகாயம்

வலி வடக்குப் பகுதியில் மக்கள் குடியிருப்புகளை நோக்கி பலாலி சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களினால் நால்வர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 11.30 மணியளவில் ஏழாலைப் பகுதியை நோக்கி ஏவப்பட்ட எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் அருள்தாஸ் (வயது 17), கோணேஸ்வரன் (வயது 31) ஆகிய இருவரும் படுகாயம் அடைந்தனர். இவர்கள் ஏழாலைப் பகுதியில் மரம் தறித்துக் கொண்டிருந்த போதே மேற்படி தாக்குதலுக்கு இலக்காகினர். மீண்டும் மாலை 4 மணியளவில் அளவெட்டிப் பகுதியை நோக்கி ஏவப்பட்ட எறிகணைகளினால் வயலில் நாற்றுநடும் பணியில் ஈடுபட்டிருந்த அளவெட்டி கிழக்கைச் சேர்ந்த என். ஜெகநாதன் (30) அர்ச்சுனன் பொன்னுத்துரை (48) ஆகியோர் படுகாயமடைந்னர் இவர்கள் நால்வரும் தற்போது சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இதேவேளை நேற்று முன் தினம் நள்ளிரவு பரா வெளிச்சத்தில் எறிகணைத் தாக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

14 ஆம், 15 ஆம் திகதிகளில்

# 6ஆம் ஆண்டிற்கான அனுமதி போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணக்கல்விமாவட்டத்து ஆண்டு 6 அனுமதிக்கான போட்டிப் பரீட்சை - 1993 பின்வரும் திகதிகளில் நடத்தப்படும் என யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பரீட்சை பிரசித்திபெற்ற பாடசாலைகளுக்கு அடுத்த மாதம் 14 ஆம் திகதியும் தேசிய பாடசாலைகளுக்கு அடுத்த மாதம் 15 ஆம் திகதியும் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி அனுமதி கோர இருக்கும் மாணவர்கள் தாம் சேர விரும்பும் பாடசாலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்களை படையில் சேர்க்க தமிழ்க் குழுக்கள் வற்புறுத்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபடுவதற்காக மேலும் பல முஸ்லிம் இளைஞர்களை படையில் சேர்த்துக் கொள்ளும்படி கொழும்பிலுள்ள மூன்று தமிழ் குழுக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளன. அரசாங்கத்துடன் ஏற்கனவே சேர்ந்து ஒத்துழைத்து வரும் (ரலோ, புளொட் மற்றும் ஈ. பி. ஆர் எல். எவ். குழுக்களே இககோரிக்கையை விடுத்திருக்கின்றன.

**காட்டில் மரங்களைத் தறிக்காதீர்**
**நாட்டினில் வளங்களைக் குறைக்காதீர்**

# வரி விளம்பரம்

## ஜெயா அழகு சாதன மாளிகை

எவர் சில்வர், பிளாஸ்ரிக், தையல் உபகரணங்கள் பன்சி கூட்ஸ் பொருள்கள். மொத்த சில்லறை விற்பனை நிலையம். ஜெயா அழகு சாதன மாளிகை 177- A மின்சார நிலைய வீதி 160, நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம். (சி-5250)

## விளாம்பழங்கள் தேவை

நன்றாக பழுத்த விளாம்பழங்கள் கொள்வனவு செய்யப்படும் விலை விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். சுரபி உணவு பதனிடல் நிறுவனம், பிரதேசசபை முன் வீதி, கோப்பாய் தெற்கு. கோப்பாய். (சி-5315)

## பற் சிகிச்சை

பற்-சிகிச்சை நிலையம் (எஸ் பி. சாமி அன் கோ கட்டிடம்) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தினசரி 12 ந.ப - 2 பி.ப வரை (3216)

## வெளிவந்துவிட்டது

''மாற்றம்'' காலாண்டு மக்கள் சஞ்சிகை, சிறுகதை, பொது அறிவு, குறுக்கெழுத்துப் போட்டி, கட்டுரைகள், சுவையான புதினங்கள் போன்றவற்றைக் கொண்டு வெளிவந்துவிட்டது. ரூபா10/-ஆண்டுச் சந்தா ரூபா 35/- பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். (3542)

## தமிழ் அகராதி

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, மற்றும் ஓவியம், சினிமா, நாவல். சிறுகதை, அரசியல், இலக்கியம் போன்ற தரமான நூல்களும், துளிர், சலனம், சுபமங்களா போன்ற சஞ்சிகைகளும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [3218]

## பெற்றுக் கொள்ளவும்

கரம்பன் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த மகேஸ்வரி சண்முகராசா என்பவரது அடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளவும்.

# வெளிவாரி பட்டப்படிப்புகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப் பாடநெறிகளான

★ கலைமாணி [B.A.] பகுதி I (2-ம்வருடம்)

★ வணிகமாணி(B.Com.)பகுதி I (2 ம்வருடம்)

விரிவுரைகள் 24-10-92 இல்
ஆரம்பமாகிவிட்டன.

விபரங்களுக்கு :

உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

(சி-5323)

## சன்மார்க்கசபை குரும்பசிட்டி
## இடம்பெயர்ந்த குரும்பசிட்டி மாணவர்களுக்கு பாடசாலைச் சீருடை
# இலவச விநியோகம்

1990 ஆனிமாதம் ஆரம்பமான இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிழக்கு கிராமசேவை அலுவலர் பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட குடும்பங்களில் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு இலவசமாக பாடசாலைச் சீருடை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தில் பயன் பெறத் தகுதி பெற்றவர்கள் 31. 10 92, 1. 11. 92 ஆகிய நாட்களில் சபைத் தற்காலிக அலுவலகம் இயங்கும் மயிலணி ஒழுங்கை, சுன்னாகத்தில் பிற்பகல் 3-5 மணிவரை தொடர்பு கொள்ளவும்.

க. விஸ்வநாதன்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## வழங்குனர்களையும் ஒப்பந்தக்காரர்களையும்

# பதிவு செய்தல் - 1993

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள்/உற்பத்தியாளர்கள்/ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1992 டிசம்பர் 15-ம் தேதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**வழங்கல்கள்:-**

1. எழுது பொருள்கள்
2. புத்தகங்கள், பருவவெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
3. அலுவலக தளபாடம் - மரம்
4. அலுவலக சாதனங்கள் (ஸ்டீல் அலுமாரி, கபினேட்டுகள் முதலியன)
5. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதிபண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன)
6. சகலவகை ஹார்ட்வெயார் பெயிண்டுகள், வார்னிஷ்
7. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்
8. மின்சார சாதனமும், உதிரிப்பாகங்களும்
9. வெட்டும் கருவிகள், மண்பாண்டங்கள் உட்பட சமயலறைப் பாத்திரங்கள்
10. ஜவுளிகள், யன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள் முதலியன
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசாயனப்பொருள்களும் கண்ணாடிப்பொருள்களும்
12 மரம்
13. கட்டடப் பொருள்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு முதலியன)
14. தும்புத்தடிகள், விளக்குமாறுகள், கால் துடைப்பங்கள் முதலியன
15. டயர்கள், டியூப்புக்கள், பற்றறிகள்
16. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணையுறுப்புக்களும்
17. ஆயுள்வேத மருந்துகள்
18 மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
19. விளையாட்டு மற்றும் நலன்புரி பொருள்கள்
20. தீயணைப்பு சாதனங்களும், பாதுகாப்பு சாதனங்களும்
21. மழைக்கோட்டுகள், சேற்று சப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன
22. பைப்புகளும், பைப் இணைப்புக்களும்
23. பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மண்பாண்டப்பொருள்கள், கண்ணாடிப்பொருள்கள், கண்ணாடிகள்
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், கருவிகள்
26. எலக்ரோணிக் உள் உறுப்புக்கள்

**சேவைகள்:-**

1. அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்.
2. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள் முதலியன) திருத்த வேலைகள்.
3. குளிர்சாதனப் பெட்டிகள், எயர்கொண்டிசனர்கள், திருத்த வேலைகளும், பராமரிப்புக்களும்.
4. ஸ்டீல் தளபாடங்களின் திருத்த வேலைகள்.
5. மரத் தளபாடங்களுக்கான திருத்த வேலைகள்
6. கதிரைகள் பின்னல்
7. உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகளைத் தைத்தல்
8. பெயர்ப்பலகைகள் வரைதலும், பிளாஸ்டிக் பெயர்ப்பலகைகளைச் செய்தலும்
9. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் ''பைண்டிங்'' செய்தல்

**எந்திரவியல் சேவைகள்:-**

1. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
2. மின் மோட்டார்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்தல்
3 குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டிடங்கள் நிர்மாணித்தலும், திருத்த வேலைகளும்)
4. மின்சார வயரிங் வேலைகள்
5. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் / திருத்த வேலைகள்
6. இரும்பு கிறில்கள்/கேற்றுகள் உருவமைத்தல்/பொருத்துதல்
7. கட்டிடங்கள் / கட்டிட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பவற்றுக்கான ஆலோசனைச் சேவைகள்
8. நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல்/பொருத்துதல்.

SPOKEN ENGLISH
WITH
GRAMMAR

BY. BRITTO

புதிய பிரிவு
ஆரம்பம்
01 - 11 - 92
[7.00 மணி]

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-5262)

## ஜே. வி. பி. முக்கியஸ்தர் கைது

(கொழும்பு)

ஜே. வி. பி. தலைவர் ஒருவர் தெகிவளை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். தெகிவளை மக்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து இவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜமீலா என அழைக்கப்படும் இவர் கொலை, கொள்ளை தொடர்பாக தேடப்பட்டு வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம், வேம்படி மகளிர் கல்லூரி
ஆண்டு 6

## அனுமதி பெறுவதற்கான பிரவேசப் பரீட்சை - 1993

01 இப்பரீட்சை 15-11-92 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

02. தற்போது ஆண்டு 5இல் கல்விகற்கும் 01-02-82க்குப் பின் பிறந்த மாணவர்கள் மட்டுமே இப் பரீட்சைக்குத் தோற்ற தகுதி யுடையவர்களாவர்.

03. பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் ரூபா 30 செலுத்தி 30-10-92 வெள்ளிக்கிழமை தொடக்கம் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

04. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் இக் கல்லூரியில் 06-11-92 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகக் கையளிக்கப்பட வேண்டும். 06-11-92க்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

05. இக்கல்லூரியில் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த வேறு விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

06. கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பிரவேசப்பத்திரங்களை கல்லூரியில் 11-11-92 புதன்கிழமை நேரில் பெற்றுக்கொள்ள வேண்டும்

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர்
கல்லூரி,
யாழ்ப்பாணம்
28-10-92.

அதிபர்
இ. இராஜரட்னம்

(சி-5326)

## நில அளவையாளர் கருத்தரங்கு

நில அளவையாளர்கள் மற்றும் நில படம் வரைவோருக்கான கலந்துரையாடல் ஒன்று தமிழீழ காவல்துறை பணிமனைகளில் நடைபெறவுள்ளன.

தனிப்பட்டோரின் காணி சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு நிலஅளவையை மேற்கொள்ள விரும்பும் அனுமதிப் பத்திரம் பெற்ற. அனுமதிப் பத்திரம் பெறாத, பயிற்சிபெற்ற சகல நிலஅளவையாளர்களும், நில வரைபடம் வரைய விரும்பும் பயிற்சிபெற்ற சகலவரைபட வரைஞர்களும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளலாம்

மேற்படி கலந்துரையாடல் இன்று 29-ம் திகதி காலை 9 00 மணிக்கு யாழ்ப்பாணத்திலும் மாலை 3 00 மணிக்கு சங்கானையிலும் 30ஆம்திகதி காலை 9.00 மணிக்கு சுன்னாகத்தி

(சி-5323)

## சன்மார்க்கசபை குரும்பசிட்டி
## இடம்பெயர்ந்த குரும்பசிட்டி மாணவர்களுக்கு
## பாடசாலைச் சீருடை
# இலவச விநியோகம்

1990 ஆனிமாதம் ஆரம்பமான இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிழக்கு கிராமசேவை அலுவலர் பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட குடும்பங்களில் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு இலவசமாக பாடசாலைச் சீருடை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தில் பயன் பெறத் தகுதி பெற்றவர்கள் 31. 10 92, 1. 11. 92 ஆகிய நாட்களில் சபைத் தற்காலிக அலுவலகம் இயங்கும் மயிலணி ஒழுங்கை, சுன்னாகத்தில் பிற்பகல் 3-5 மணிவரை தொடர்பு கொள்ளவும்.

**க. விஸ்வநாதன்**
பிரசார செயலாளர்

(3533)

---

# 2-வது பிறந்தநாள்வாழ்த்து



## செல்வி சி. சிந்துஜா

நீர்வேலி வடக்கு பரலோகமாதா கோவிலடியைச் சேர்ந் சிறீதரன் றாகினி தம்பதிகளின் செல்வப்புதல்வி சிந்துஜா தனது இரண்டாவது பிறந்த நாளை 29 10. 92 இன்று நீர்வேலியில் தனது இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகிறார். இவரை பிரான்சில் இருக்கும் அன்பு அப்பா, அம்மா, கரவெட்டி அப்பப்பா, அப்பம்மா, பெரியத்தை, பிரான்சில் இருக்கும் பாஸ்கரன் சித்தப்பா, சித்தி, யசோ பெரட்டம்மா கின்சிலி, தொட்டப்பா, சின்னத்தை சுவேந்தி, மற்றும் யோகு அங்கிள். உமா அத்தை, உதயன் பெரியப்பா மற்றும் நீர்வேலி வடக்கை சேர்ந்த ஐயா, அம்மம்மா, பாலா மாமா, கெனடி மாமா, பெரியம்மா, பெரியப்பா, அம்மம்மார், அம்மப்பாமார், அன்ரிமார், மாமாமார், அண்ணாமார், தம்பிமார், தங்கைமார், ஞானப்பு, பூட்டி பிரான்சில் இருக்கும் அன்ரன் அப்பப்பா, நீர்வேலி டெறன்ஸ் அப்பப்பா, மற்றும் உற்றார், உறவினர் பரலோக அன்னையின் ஆசி பெற்று சகல கலைகளும் கற்று பல்லாண்டு காலம் தமிழீழத்தில் வாழ என வாழ்த்துகிறார்கள்.

நன்றி.

(5317)

---

3. குளிர்சாதனப் பெட்டிகள், எயர்கொண்டிசனர்கள், திருத்த வேலைகளும், பராமரிப்புக்களும்.
4. ஸ்டீல் தளபாடங்களின் திருத்த வேலைகள்.
5. மரத் தளபாடங்களுக்கான திருத்த வேலைகள்
6. கதிரைகள் பின்னல்
7. உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகளைத் தைத்தல்
8. பெயர்ப்பலகைகள் வரைதலும், பிளாஸ்டிக் பெயர்ப்பலகைகளைச் செய்தலும்
9. உடைகளைச் சலவை செல்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் ''பைண்டிங்'' செய்தல்

### எந்திரவியல் சேவைகள்:-

1. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
2. மின் மோட்டார்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்தல்
3. குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டிடங்கள் நிர்மாணித்தலும், திருத்த வேலைகளும்)
4. மின்சார வயரிங் வேலைகள்
5. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் / திருத்த வேலைகள்
6. இரும்பு கிறில்கள்/கேற்றுகள் உருவமைத்தல்/பொருத்துதல்
7. கட்டிடங்கள் / கட்டிட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பவற்றுக்கான ஆலோசனைச் சேவைகள்
8. நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல்/பொருத்துதல்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்கல்கள் / சேவைகள் 1993'' எனக் குறிப்பிடபபட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்
2. பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல்/சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பதிவுக்கட்டணமாக ரூபா 150/- பெறுமதியான, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்குப் பெறப்பட்ட காசுக்கட்டளை/தபாற்கட்டளையையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்தும் விலை மனுக்களைக் கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும் பொழுது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருள்களை சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றிப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

1. விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை
2. பெயரும் விலாசமும்
3. தொலைபேசி இலக்கம்
4. வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
5. வியாபாரத்தின் தன்மை
6. வங்கியாளர்களின் பெயர்
7. கிடைக்கக் கூடிய கடன்வசதிகள்

### குறிப்பு:

பொறியியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்களிடமிருந்து பின்வரும் தகவல்கள் கோரப்படுகின்றன.

எந்திரவியல் சேவை 3-க்கு பின்வருவோர் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்

(அ) ICTAD தரப்படுத்தலின் கீழ் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு ஏதாவது அரசாங்கத் திணைக்களம்/கூட்டுத்தாபனம்/சபைகளில் பதிவு செய்துள்ளவர்கள் (பதிவுப் புத்தகத்தின் போட்டோப் பிரதி/அதற்குரிய ஆவணத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.)

(ஆ) ஏனையோர் ICTAD/ID/02 (இரு பிரதிகள்) ICTAD/ID/01 ஐயும் ICTAD, 123 விஜயராம மாவத்தை, கொழும்பு-7 என்ற முகவரியில் இருந்து கொள்வனவு செய்து அதற்கேற்ப விண்ணப்பிக்க வேண்டும்.)

(இ) விண்ணப்பதாரர் கிளிநொச்சி / வவுனியா மாவட்டத்தில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந்தால் அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். அத்துடன் அம்மாவட்டங்களில் உள்ள தமது கிளை/பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்துக்குரிய வியாபாரப் பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

உங்கள் தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டிடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களைத் (7 இற்கு மட்டும்) தருக.

(சி/5295)

**பதிவாளர்,**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

---

சைப் பிரவேசப்பத்திரங்களை கல்லூரியில் 11-11-92 புதன்கிழமை நேரில் பெற்றுக்கொள்ள வேண்டும்

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்
28-10-92.

அதிபர்
**இ. இராஜரட்னம்**

(சி-5326)

---

## நில அளவையாளர் கருத்தரங்கு

நில அளவையாளர்கள் மற்றும் நில படம் வரைவோருக்கான கலந்துரையாடல் ஒன்று தமிழீழ காவல்துறை பணிமனைகளில் நடைபெறவுள்ளன.

தனிப்பட்டோரின் காணி சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு நிலஅளவையை மேற்கொள்ள விரும்பும் அனுமதிப் பத்திரம் பெற்ற. அனுமதிப் பத்திரம் பெறாத, பயிற்சிபெற்ற சகல நிலஅளவையாளர்களும், நில வரைபடம் வரைய விரும்பும் பயிற்சிபெற்ற சகலவரைபட வரைஞர்களும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளலாம்

மேற்படி கலந்துரையாடல் இன்று 29-ம் திகதி காலை 9 00 மணிக்கு யாழ்ப்பாணத்திலும் மாலை 3 00 மணிக்கு சங்கானையிலும் 30ஆம் திகதி காலை 9. 00 மணிக்கு சுன்னாகத்திலும் மாலை 3. 00 மணிக்கு கோப்பாயிலும் 31ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வல்வெட்டித்துறையிலும் மாலை 3.00 மணிக்கு பருத்தித்துறையிலும் நவம்பர் முதலாம் திகதி காலை 9 00 மணிக்கு சாவகச்சேரியிலும் மாலை 3 00 மணிக்கு பளையிலும் அமைந்துள்ள காவல்துறை பணிமனைகளில் நடைபெறவுள்ளன.

இக்கலந்துரையாடலில் கலந்து கொள்வோர் தமக்கு அண்மையிலுள்ள காவல்பணிமனைகளில் மேற் குறிப்பிட்ட தினத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளலாம் எனவும் நிலஅளவை, வரைபடத்தொழில் வாய்ப்பினைப் பெறும்போது இக்கலந்துரையாடலில் கலந்து கொள்வோருக்கே முன்னுரிமை வழங்கப்படும் எனவும் தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் அறிவித்துள்ளார்.

(3544)

---

# நினைவு கூருகின்றோம்
## 1992-10-29

1985-ம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காப்படையினரின் எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட தொண்டமானாற்றைச் சேர்ந்த தமிழ் இளைஞன்-

1987-ம் ஆண்டு உரும்பராயில், இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 2- தமிழர்கள்

1989-ம் ஆண்டு சுண்டிக்குளம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**காண்டீபன்** (இராசலிங்கம் சிவபாலசுப்பிரமணியம் சாவகச்சேரி-யாழ்).

இதே ஆண்டு கொலையுண்ட நாட்டுப்பற்றாளரான

**கனகரத்தினம் ரவீந்திரன்** (விளாங்கொடை, தெல்லிப்பழை கிழக்கு)

1990-ம் ஆண்டு இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மட்டு-ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவுகூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5321)

### சிந்தனைக்கு

இவ்வுலகில் தலையாயது நாம் எந்நிலையில் உள்ளோம் என்பது கூட அல்ல; எத்திக்கு நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பது தான்

ஆலிவர் வெண்டெல் ஹோல்ம்ஸ்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 29-10- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


# மந்திரத்தால் மாங்காய் பறிக்க முயற்சி

இனப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வொன்றை இவ்வருடமுடிவிற்குள் காணமுடியும் என்று பாராளு மன்றத் தெரிவுக்குழுவின் தலைமைப்பீடம் கருதுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்கா முன்வைத்த தீர்வுத் திட்டத்தை கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களே நிராகரித்த நிலையில். தெரிவுக்குழுவின் தலைமைப்பீடம் இவ்வாறு கருதுவதானது பெரும் ஆச்சரியத்தைக் கொடுக்கும் ஒன்றாகவே உள்ளது.

ஏனெனில், பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இன்று சிங்கள அரசியற் கட்சிகள் ஆயினும் சரி, தமிழ் அரசியற் கட்சிகளாயினும் சரி நம்பிக்கை வைத்துள்ளனரா என்றால் இல்லை என்றே கூற வேண்டும். இதனை பாராளுமன்றத் தெரிவுக்குழு கூட்டங்களுக்கு பெரும்பாலான அங்கத்தவர்கள் சமுகம் அளிக்காமல் இருப்பதில் இருந்தே புரிந்து கொள்ளலாம். சிலவேளைகளில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை கூட்டுவதற்குதேவையான கோரம் இல்லாமல் போய்விடுவதும் உண்டு.

இவை ஒருபுறம் இருக்க பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னேற்றகரமான திட்டம் ஒன்றையும் இதுவரை தயாரிக்கவில்லை இனப்பிரச்சினையைத் தீர்க்கும் என பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் முன்வைத்த தீர்வுத்திட்டம் தமிழ் குழுக்களினால் மட்டுமல்ல சிங்களப் பேரினவாதிகளாலும் நிராகரிக்கப்பட்டுவிட்டது இந்நிலையில். இனப்பிரச்சினைக்கு இவ்வருட இறுதிக்குள் எப்படி திடீர் முடிவு காணமுடியும்?

அவ்வாறானால் திரு. மங்களமுனசிங்காவிடம் இருபகுதியினரும் ஏற்றுக்கொள்ளக் கூடியவேறுபுதிய திட்டம் ஏதாவது உள்ளதா? அது எங்கிருந்து வந்தது? பிரச்சினைக்குரிய இரு சாராரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதிட்டமாக அது இருக்குமா? திரு. மங்கள முனசிங்கா முன்வைத்ததிட்டத்தை தமிழ்க்குழுக்கள்

# லலித் கட்சியிலிருந்து சரத்பெரேரா விலகினார்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்கள் லலித்அத்துலத்முதலி, காமினி திசாநாயகா தலைமை தாங்கும் ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான சரத் பெரேரா கட்சியிலிருந்து விலகியுள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை இக்கட்சியின் உபதலைவியான திருமதி மல்லிகா டிமெல் கட்சியின் அங்கத்துவத்தில் இருந்து நீங்கி உள்ளார்.

எதிர்பார்த்த சேவைகள் நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைக்கவில்லை ஆகையால் கட்சியின் அங்கத்துவத்தில் இருந்தும் சகல பொறுப்புக்களில் இருந்தும் விலகிக் கொள்வதாக கட்சியின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# காவற்படையில் இணைய முஸ்லிம்களுக்கு கோரிக்கை

(கொழும்பு)

காவற்படையில் இணைந்து கொள்ளுமாறு முஸ்லிம் மக்களுக்கு முஸ்லிம் லீக் அழைப்பு விடுத்துள்ளது.

அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் அவசர கூட்டம் கடந்தவாரம் நடைபெற்றபோது இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாகவும்,

இந்தக் கூட்டத்தில் முஸ்லிம் மக்களது பாதுகாப்பு சம்பந்தமாகவும், தற்போதைய நிலை பற்றியும் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை செஞ்சிலுவை அதிகாரிகள் யாழ். வந்தனர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கொழும்பு தலைமை அலுவலக அதிகாரிகள் குழு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்கள் இம் மாவட்டத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரின் பராமரிப்பில் உள்ள அகதிமுகாம்களைப் பார்வையிட்டதாக தெரிய வருகின்றது. (82)

# தலைவரின் வழியில் எங்களை தளபதி சுபன்வழிநடத்தினார்

## தளபதிசுபன் நினைவஞ்சலி கூட்டத்தில்உரை

(முழங்காவில்)

தலைவர் பிரபாகரனின் கட்டுப்பாட்டையும் கொள்கைகளையும் மதித்து அந்த வழியிலேயே தானும் போராட்டத்தை வழி நடத்திச் சென்றதுடன் எம்மையும் அந்த வழியிலேயே அண்ணன் சுபன் வழி நடத்தினார்.

இவ்வாறுமன்னார்மாவட்ட சிறப்புத்தளபதி லெப்டினன்ட் கேணல் சுபனினதும் ஏனைய ஆறு போராளிகளினதும் 31 ஆம் நாள் நினைவு நாளில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் முழங்காவில் பிரதேச அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு செளந்தர் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; அண்ணன் சுபன் அவர்கள் மேற்கொண்ட அதிரடி மின்னல் வேகத் தாக்குதல்கள் அநேகம் அவருடைய சாதனைகள்சரித்திரம்படைத்தவை என்றார். முழங்காவில் பிரதேச ஜெயபுரம் அ. த. க. பாடசாலையில் லெப்.கேணல் சுபன் மற்றும் ஆறு போராளிகளினதும் 31ஆம்நாள்நினைவு தினத்தை ஒட்டி அஞ்சலிக் கூட்டமும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. அங்கு பல அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு இவர்கள் அனைவரினதும்உருவப்படங்களும்நன்கு அலங்கரிக்கப்பட்டு நினைவு கூரப்பட்டது.

இந்நிகழ்வில் மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி சுதர்சினா சிறப்புரையாற்றினார். அங்கு மாவீரர்களின் பெற்றோர் பொதுமக்களால் கௌரவிக்கப்பட்டதுடன் ஈகைச் சுடரை ஏற்றி வைத்தனர்.

இதேவேளை மன்னார் மாவட்டம் பூநகரிப்பகுதி நல்லூரிலும் இந் நினைவஞ்சலிக் கூட்டமும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன- சி. செல்வநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக பூநகரி நல்லூர் பிரதேச அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் செல்வன் மதன்ராஜ் மன்னார் மாவட்ட மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி மர்லியா, போக்குவரத்து கண்காணிப்பு பொறுப்பாளர் ஐ. நளன் பூநகரி பிரதேச மகளிர் பிரிவு பொறுப்பாளர் மங்கயற்கரசி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

சுதந்திரக் கட்சியின்

# மத்தியகுழுவை கூட்ட உறுப்பினர் கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தற்சமயம் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையை முடிவுக்கு கொண்டுவரும் பொருட்டு கட்சியின் செயற்குழுவை விரைவில் கூட்டுமாறு கட்சியின் தலைமைப் பீடத்தினை கேட்டுக்கொள்ளும் மகஜர் ஒன்றை கட்சி உறுப்பினர்களின் ஒரு சாரார் இப்பொழுது தயாரித்துவருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

கட்சி உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பிரிவினர் இந்த மகஜரில் கையெழுத்திட்டதும் மகஜர் தலைமைப் பீடத்திற்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறிமா அணி, அனுரா அணி என இரு அணிகளாக சுதந்திரக் கட்சி பிளவுபடும் நெருக்கடி தோன்றியுள்ளது. இந்நிலையில் சிறிமாவோ பண்டாரநாயக்கா கட்சியின் டார்லிறோட் தலைமையகத்தை தற்போது மூடிவைத்துள்ளார்.

# கட்சி பாதுகாப்பானவர்களிடம் போகும் போது பதவி விலகுவேன்

## - சிறிமாவோ அறிவிப்பு

எனது கட்சி பாதுகாப்பானவர்களின் கைக்கு போய்ச் சேரும் என நம்பிக்கை வரும் போது நான் பதவியிலிருந்து விலகுவேன் எனக்கு அதிகார வேட்கை கிடையாது என சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைவி சிறிமாவோபண்டாரநாயக்கா தெரிவித்தார்.

இன்று மக்களின் உயிரைக் காக்கவோ அல்லது வாழ்க்கைச் செலவைக் குறைக்கவோ முடியாதிருக்கும் ஐ. தே. க. அரசை தோற்கடிக்க எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டி உள்ளது

என்னால் யோசனை தெரிவிக்கப்பட்ட கூட்டு எதிரணி தோழமை அமைப்புக்கான வரைவு யாப்பு குறித்து இன்னமும் முடிவு எடுக்கப்படவில்லை. இவ் யாப்பை வரைவதில் பலதரப்பட்ட கட்சிகளின் தலைவர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள் அடுத்த பொதுத் தேர்தலுக்கான கூட்டு தந்திரோபாயத்திற்கு இது அத்தியாவசிய தேவையாகும்.

எனினும் இந்தப்பணியில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலி முக்கிய பங்கை வகிக்கின்றார் என்பதில் எந்த உண்மையுமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# குழப்பத்தை தூண்ட எதிர்க்கட்சிகள் முயற்சி

## - பிரேமதாசா குற்றச்சாட்டு

நாட்டில் குழப்பத்தை தூண்ட எதிர்க்கட்சிகள் தூபமிடுவதாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா குற்றம் சாட்டியுள்ளார்,

அவர் மேலும் கூறுகையில்; பொலிசாருக்கு ஆத்திரமூட்டி கண்ணீர்ப்புகைப் பிரயோகமும், துப்பாக்கிச் சூடும் நடத்த தூண்டுவதிலேயே விரக்தியாலும் சோர்வாலும் பீடிக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சிகள் குறியாக இருப்பதாக குறிப்பிட்டார்.

அத்துடன் அரசுக்கு எதிராக மேற்கொள்ளவிருந்த மனித சங்கிலிப் போராட்டம் பிசுபிசுத்துப் போயிருப்பதாகவும், எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒருவர் கழுத்தை மற்றவர் பிடிப்பதிலேயே அக்கறை காட்டுவதாகவும் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில்

# கிராம சேவையாளருக்கு 3 மாத விசேட பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் கிராம சேவை அலுவலர்களுக்கான மூன்று மாத விசேட பயிற்சியை கலைப்பீடம் நடாத்த தீர்மானித்திருப்பதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராஜா தெரிவித்தார்.

கிராம சேவையாளர்களுக்கான இக்கற்கை நெறியில் புவியியல், பொருளியல் உட்பட நகர, கிராம அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய புதிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு ஆராயப்படவுள்ளன.

இக்கற்கைநெறி தொடர்பான சகல செலவுகளையும் யாழ் கச்சேரி பொறுப்பேற்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது மேலும் இக்கற்கை நெறி தொடர்பாக யாழ். செயலகத்தினால் அனுமதி கிடைத்ததும் வெகு விரைவில் ஆரம்பிக்கும் என துணைவேந்தர் மேலும் தெரிவித்தார். (05)

# இருவர் கைது

[வடமராட்சி]

பருத்தித்துறை புலோலி கிழக்கில் வீடொன்றில் கொள்ளைச்சம்பவத்தில் ஈடுபட்டவர்களில் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி அப்பகுதியில் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை களவாடியவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். பருத்தித்துறை காவல்துறையினரால் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [82]

தெரிவுக்குழுவை கூட்டுவதற்குதேவையான கோரம் இல்லாமல் போய்விடுவதும் உண்டு.

இவை ஒருபுறம் இருக்க பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னேற்றகரமான திட்டம் ஒன்றையும் இதுவரை தயாரிக்கவில்லை இனப்பிரச்சினையைத் தீர்க்கும் என பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் முன்வைத்த தீர்வுத்திட்டம் தமிழ் குழுக்களினால் மட்டுமல்ல சிங்களப் பேரினவாதிகளாலும் நிராகரிக்கப்பட்டுவிட்டது இந்நிலையில். இனப்பிரச்சினைக்கு இவ்வருட இறுதிக்குள் எப்படி திடீர் முடிவு காணமுடியும்?

அவ்வாறானால் திரு. மங்களமுனசிங்காவிடம் இருபகுதியினரும் ஏற்றுக்கொள்ளக் கூடியவேறுபுதிய திட்டம் ஏதாவது உள்ளதா?அது எங்கிருந்து வந்தது?பிரச்சினைக்குரிய இரு சாராரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதிட்டமாக அது இருக்குமா?திரு. மங்கள முனசிங்கா முன்வைத்ததிட்டத்தை தமிழ்க்குழுக்கள் 'போதாது' என நிராகரித்தவேளை, சிங்களப் பேரினவாத சக்திகள் 'அதிகமானது' எனப் புறக்கணித்தனர். இவ்வாறான இரு துருவங்களாகவுள்ள இரண்டு சக்திகள் ஏற்கும் தீர்வுத்திட்டம் ஒன்றை மங்கள முனசிங்காவால் எவ்வாறு கண்டுபிடிக்கமுடியும்அதுவும்பெரியசிங்களக்கட்சிகளின்ஆதரவின்றி நடைமுறைச் சாத்தியமானதா?

திரு. மங்கள முனசிங்கா அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ தனது உள் வீட்டுப் பிரச்சினையால் குழம்பிப் போய் உள்ளது எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் ஓர் அணியும் அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா தலைமையில் ஓர் அணியுமாக சுதந்திரக்கட்சி பாகப்பிரிவினையில் ஈடுபட்டுள்ள நிலையில், அக்கட்சியிலுள்ள தீவிர பௌத்த பேரினவாத சக்திகள் 'ஹெல உறுமய' என்ற அமைப்பை உருவாக்கியுள்ளன. இவ் அமைப்பின் பிரதான நோக்கம் தமிழருக்கு அதிகாரப் பகிர்வின் மூலம் அரசியல் உரிமைகள் வழங்கப்படக் கூடாது என்பதேயாகும் இதேவேளை தாய்க்கும் (சிறிமாவோ) - மகனுக்கும் (அநுரா) இடையிலான சண்டையில் தாம் சிசுகிக் கொள்ளக் கூடாது என விரும்பும் சுதந்திரக்கட்சியின் ஓர் அணியினர் 'ஜன உறுமய'(மக்கள் உரிமை) என்ற அமைப்பை உருவாக்கியுள்ளது.

இதேவேளை அரசாங்கக் கட்சியோ டிசம்பர் மாத இறுதிக்குள் பாராளுமன்றத் தெரிவுக்குழு தீர்வுத்திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டும் எனக் கூறிவிட்டு இனப்பிரச்சினையின் தீர்வு குறித்து எதுவித அரசியல் முன்னேற்பாடும் எடுக்காமல் மௌனமாக உள்ளது.

இந் நிலையில் தெரிவுக்குழுத் தலைவர் மங்கள முனசிங்கா எதனை வைத்துக் கொண்டு இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணலாம் எனக் கூறினாரோ தெரியவில்லை அதாவது திரு, மங்கள முனசிங்காவின் கூற்று ''மந்திரத்தால் மாங்காயைப் பறிப்பது'' போல் உள்ளது சுமார் 45 வருடங்களுக்கு மேலாக புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினையை இரண்டு மாதத்தில் தீர்ப்பதென்பது ஓர் அரசியல்வாதியின் அரசியல்அதிர்வேட்டாக இருக்கலாமே ஒழிய யதார்த்தத்தின் வெளிப்பாடாக இருக்கமுடியாது.

---

போது நான் பதவியிலிருந்து விலகுவேன் எனக்கு அதிகார வேட்கை கிடையாது என சிறி

இன்று மக்களின் உயிரைக் காக்கவோ அல்லது வாழ்க்கைச் செலவைக் குறைக்கவோ

றப்பட வேண்டி உள்ளது

என்னால் யோசனை தெரிவிக்கப்பட்ட கூட்டு எதிரணி தோழமை அமைப்புக்கான வரைவு யாப்பு குறித்து இன்னமும் முடிவு எடுக்கப்படவில்லை. இவ் யாப்பை வரைவதில் பலதரப்பட்ட கட்சிகளின் தலைவர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள் அடுத்த பொதுத் தேர்தலுக்கான கூட்டு தந்திரோபாயத்திற்கு இது அத்தியாவசிய தேவையாகும்.

எனினும் இந்தப்பணியில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலி முக்கிய பங்கை வகிக்கின்றார் என்பதில் எந்த உண்மையுமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கிராம சேவை அலுவலர்களுக்கான மூன்று மாத விசேட பயிற்சியை கலைப்பீடம் நடாத்த தீர்மானித்திருப்பதாகயாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் அ. துரைராஜா தெரிவித்தார்.

கிராம சேவையாளர்களுக்கான இக்கற்கை நெறியில் புவியியல், பொருளியல் உட்பட நகர, கிராம அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய புதிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு ஆராயப்படவுள்ளன.

இக்கற்கைநெறி தொடர்பான சகல செலவுகளையும் யாழ் கச்சேரி பொறுப்பேற்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது மேலும் இக்கற்கை நெறி தொடர்பாக யாழ். செயலகத்தினால் அனுமதி கிடைத்ததும் வெகு விரைவில்

## குழப்பத்தை தூண்ட எதிர்க்கட்சிகள் முயற்சி

### - பிரேமதாசா குற்றச்சாட்டு

நாட்டில் குழப்பத்தை தூண்ட எதிர்க்கட்சிகள் தூபமிடுவதாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா குற்றம் சாட்டியுள்ளார்,

அவர் மேலும் கூறுகையில்; பொலிசாருக்கு ஆத்திரமூட்டி கண்ணீர்ப்புகைப் பிரயோகமும், துப்பாக்கிச் சூடும் நடத்த தூண்டுவதிலேயே விரக்தியாலும் சோர்வாலும் பீடிக்கப்படடுள்ள எதிர்க்கட்சிகள் குறியாக இருப்பதாக குறிப்பிட்டார்.

அத்துடன் அரசுக்கு எதிராக மேற்கொள்ளவிருந்த மனித சங்கிலிப் போராட்டம் பிசுபிசுத்துப் போயிருப்பதாகவும், எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒருவர் கழுத்தை மற்றவர் பிடிப்பதிலேயே அக்கறை காட்டுவதாகவும் தெரிவித்தார்.

## இருவர் கைது

[வடமராட்சி]

பருத்தித்துறை புலோலி கிழக்கில் வீடொன்றில் கொள்ளைச்சம்பவத்தில் ஈடுபட்டவர்களில் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி அப்பகுதியில் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை களவாடியவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். பருத்தித்துறை காவல்துறையினரால் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [82]

## ராஜீவ் கொலை வழக்கு; அடுத்த மாதம் விசாரணை

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை அடுத்த மாதம் முதல் சென்னை பூந்தமல்லி சிறப்புக் காவல் பிரிவு பாதுகாப்புத்துறை வளாகத்தில் நடைபெறும் என்று சிறப்பு புலனாய்வுக் குழுவின் தலைவர் வி ஆர். கார்த்திகேயன் கூறியுள்ளார். சேலத்தில் நேற்றுமுன்தினம்செய்தியாளர்களிடம்பேசுகையில்இவ்வழக்கு விசாரணைஅடுத்தமாதம்மூன்றாவது வாரத்தில் தொடங்க வாய்ப்பு இருப்பதாகவும், பன்னிரண்டாயிரம் பக்கங்கள் கொண்ட விசாரணை அறிக்கையில், ஏழாயிரம் பக்கங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு விட்டதாகவும், குறிப்பிட்டார்.

## ஜெயலலிதா அரசுக்கு ஆதரவு தொடர்ந்து வழங்கப்படும்

### காங்கிரஸ் பேச்சாளர் கார்டியல் அறிவிப்பு

(டில்லி)

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்கும் அ. தி. மு. க. விற்கும் இடையில் உள்ள உறவு குறித்து தமது கட்சி மகிழ்ச்சி அடைவதாகவும், தமிழக அரசுடன் காங்கிரஸ் கட்சி தொடர்ந்து ஒத்துழைத்து வரும் என்றும் இக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் வி. என். கார்டியல் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். சுப்பிரமணியம் சுவாமி ஜெயலலிதாமீது சுமத்திய குற்றச்சாட்டுக்களை தமது கட்சி ஏற்கவில்லை என்றும், சென்னையில் சுவாமியின் நடவடிக்கைக்கும் தமது கட்சிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## சோமாலியாவில் இறப்போர் எண்ணிக்கை அதிகரிப்பு

(மொகடிஸு)

சர்வதேச நிவாரண உதவிகள் தடைப்படுத்தப்பட்டு வருவதனை அடுத்து சோமாலியாவின் தென்பகுதி நகரான பார்டேரேயில் செத்து மடிவோர் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

டாரோட் மலை ஜாதி போராளிகள் இயக்கத்தின் தலைவர் மொகமட் பாபரா அயிடீட்டின் ஆதரவாளர்கள் புதிதாக சண்டையிடத்தலைப்பட்டதனைத் தொடர்ந்து அந்நகருக்கு நிவாரண உதவிகளுடன் விரயவிருந்த ஐ. நா. விமானங்கள் அங்கு போக வேண்டாமென உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் வெளிநாட்டுத் தொண்டர்களும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்

ஐ நா. நிவாரண உதவிகள் பார்டேரே நகரை சென்றடைய முன்னர் சுமார் 75 பேர் இறந்ததாக சர்வதேச நிவாரணப் பிரிவின் நைரோபி நாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ஜெயலலிதாவை நீக்கக்கோரி பேரணி நடைபெறும்

### — சுவாமி அறிவிப்பு

(சென்னை)

செல்வி ஜெயலலிதாவின் எல்லா ஊழல்களைப் பற்றியும் தமிழ் நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர் மாநிலத்தையே கொள்ளையடித்துள்ளார். இந்நிலையில் ஜெயலலிதாவை நீக்கக்கோரி தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து சென்னை நோக்கி மக்கள் பேரணி நடத்தப் போவதாக ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

அண்மையில் சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த போது அவர் இதைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

செல்வி ஜெயலலிதா என்னைத் திட்டுவதனைத் தவிர என் குற்றச்சாட்டுகளுக்கு எந்தப் பதிலையும் தரத் தவறிவிட்டார். எனவே என் குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறது என்பதனை நிரூபித்து உள்ளார்.

மதுரைக் கூட்டத்தில் 'சீக்கிரம் ஜெயலலிதாவை நீக்குங்கள்' என்ற கோஷங்களைப் பெண்கள் முன்வைத்தனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழகத்தில் ஆட்சி மாற்றம் விரைவில் ஏற்படும்

### - கருணாநிதி அறிவிப்பு

(திருச்)

தமிழ்நாட்டில் ஜெயலலிதாவின் ஊழல் ஆட்சியில் இருந்து தமிழக மக்கள் விடுதலை பெற வேண்டும் இந்த கருத்துக்கு ஆதரவாக எழுகின்ற குரல் எங்கிருந்து எழுந்தாலும் அது வரவேற்கத்தக்கது என திருச்சியில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியிலே மு. கருணாநிதி அவர்கள் தெரிவித்துள்ளார்

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் ஜெயலலிதா மீது 18 ஊழல் குற்றச்சாட்டுக்கள்கூறி வழக்கு தொடர அனுமதி கோரி இருந்தும் எந்தவிதமான பதிலும் இதுவரைவரவில்லை எனத்தெரிவித்தார்.

முன்னதாக ஜெயலலிதா முதலமைச்சர் பதவியைத் தவறாகப் பயன்படுத்தி சட்ட விதி முறைகளுக்கு புறம்பாக செயல்பட்டதாக ஊழல் குற்றச்சாட்டு கூறி எம். எல். ஏ. பதவியை ரத்துச் செய்ய வேண்டும் என சுப்பிரமணியம் சுவாமி மனுக்கொடுத்துள்ளாரே அதுபோன்று தி மு க. வும் ஏதும் மனுக்கொடுக்குமா எனக் கேட்டபோது ஏற்கனவே ஆதாரத்துடன் நிரூபிப்பதற்குகாக 18 ஊழல் குற்றச்சாட்டுகளைக் கொடுத்து இருக்கிறோம். இதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசும் தேர்தல் கமிஷனும் எடுக்குமா அல்லது மழுப்பி விடுமா என்பதைப்பொறுத்து இருந்து தான் பார்போம்.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஆட்சி மாற்றம் விரைவிலே வரும் எனவும் தெரிவித்தார்.

## ஆதரவு குறைகிறது

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் சுயேட்சை அபேட்சகர் ரொஸ்பெரட் ஜனநாயகக்கட்சியாளர்களின் ஆதரவைப் பெறும்போது ஜனநாயகக் கட்சி அபேட்சகர் பில் கிளின்டன் ஜனாதிபதி புஷ்சிற்கு எதிராகப் பெரும் ஆதரவு குறைந்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## 1200 கோடி டொலர் நிதி உதவி

(மொன்டானா)

மாஜி சோவியத் யூனியனின் குடியரசுகளுக்கு உதவும் விதமாக சர்வதேச நாணய நிதியிலிருந்து 1200 கோடி டொலர் உதவியளிக்கும் மசோதாவில் அமெரிக்க ஜனாதிபதி புஷ் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டுள்ளார்.

ரஷ்யா, உக்ரேய்ன், ஆர்மீனியா மற்றும் புது அரசாங்கங்களில் ஏற்படும் சீர்திருத்தங்களுக்கு தாம் உதவவேண்டுமெனவும் புஷ் மேலும் தெரிவித்தார்.

ஈழநாதம்

# தம்புல்லயில் திடீர் நோய்; 400 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

## - பலர் இறந்ததாக தகவல்

(தம்புல்ல)

தம்புல்லபகுதியில் வேகமாக பரவி வரும் ''இரத்தஇழப்பு'' எனும் புதிய நோயினால் பாதிக்கப்பட்டு இதுவரை நானூறுக்கும் மேற்பட்டோர் 'வீரகொப்பேகடுவ' வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் பலர் இறந்து விட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இந்நோய் குழந்தைகள் முதல் வயோதிபர்கள் வரை அனைவரையும் பாதித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் 40 வீதமானோர் சிறுவர்கள் ஆகும் இந்நோயின் தாக்கத்தைக் குறைக்கும் நோக்குடன் அங்குள்ள சகல உணவுக் கடைகளும் மூடப்பட்டுள்ளன. தற்போது நாளாந்தம் 50 பேர் வரையில் இந்நோய்க்காக வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நோய் 'பசிவரிடை சென்றி' என்ற வைரசினால் ஏற்படுவதாகவும் இதனை தடுப்பதற்காக மருத்துவ நிபுணர்களும், சுகாதார சேவை திணைக்கள ஊழியர்களும் மேலதிகமாக மாத்தளையில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளனர்.

நாளாந்தம் இந்நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இந்த பிரதேசத்தில் வெளியார் நுழைவதோ அல்லது இங்குள்ளவர்கள் மருத்துவ பரிசோதனையின்றி வெளியேறுவதோ தடுக்கப்பட்டுள்ளது.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களிடம் மலேரியா நோய்க்குரிய அறிகுறிகள் போன்று காணப்படுவதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இந்நோய் பழுதடைந்த மரக்கறிவகைகள், ஈக்கள் ஆகியவற்றால் ஏற்படுவதாகவும் அதனை கட்டுப்படுத்த சகலமுயற்சிகளும்மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு மரக்கறி சந்தைக்கு இங்கு இருந்து மரக்கறிவகைகள் அனுப்பப்படுவது தடைப்பட்டதால் கொழும்பில்மரக்கறிக்கானவிலை உயர்ந்து காணப்படுகின்றது.

# முஸ்லிம் காங்கிரஸ் முகமட்டிடம் உதவி கோரல்

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும், பொலநறுவை, அநுராதபுரம்பகுதிகளிலும்வாழும் முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்வதர்கு உதவ வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ், சபாநாயகர் எம். எச். முகமட்டைக் கேட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

சபாநாயகர் என்ற செல்வாக்கைப் பயன்படுத்தி இதனைச் செய்ய வேண்டும் என்று சபாநாயகரை முஸ்லிம் காங்கிரஸ் கேட்டுள்ளது.

# தொழில் தேடி சிங்கப்பூர் செல்ல வேண்டாம்

(கொழும்பு)

சிங்கப்பூரில்தொழில்வாய்ப்பு இல்லை, எனவே அங்கு தொழில் தேடிப் போகவேண்டாம் என தொழில் அமைச்சின் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக பணிப்பாளர் திரு. சாமந்த ஜயசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிங்கப்பூர் வேலை வாய்ப்பு தொடர்பாக ஏமாற்றிய பல தொழில் முகவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்எனவும், இன்னும் இது தொடர்பாக மக்களிடம் தகவல்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

## மனிதநேயக்

மகளிர் விவகார அமைச்சின் ஊடாக விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. இப்பணிப்புரை கண்டிப்பாக நடைமுறைப் படுத்தப் படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகரசபை JAFFNA MUNICIPAL COUNCIL

## லெப்.

கமவுக்கான தண்டனை என்ன என்பது பற்றி இராணுவ நீதிமன்றம் சிபாரிசு எதையும் தெரிவிக்கவில்லை.

கடந்த வருடம் ஜூலை மாதத்தில் கொக்கட்டிச் சோலை பகுதியில் அறுபத்தியேழு தமிழர்கள் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டமை தெரிந்ததே.

இப் படுகொலை பற்றி விசாரணை நடத்திய நீதிமன்றம்

# மேலும் பலர் விலகினர்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்து மேலும் பன்னிரண்டு உறுப்பினர்கள் தங்களுடைய பதவி விலகல் கடிதங்களை கட்சிச் செயலாளரிடம் சமர்ப்பித்தனர் என்று கொழும்பில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெல்லின் இணைப்பதிகாரியும், இரு செயலாளர்களும் பதவி விலகிய பன்னிரண்டு பேரில் அடங்குவர் என்றும் கூறப்படுகிறது.

# சேவைக் கால கருத்தரங்கு

பண்டத்தரிப்பு கோட்ட ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்களுக்கான சேவைக்கால கருத்தரங்கு வகுப்புக்கள் யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இம்மாதம் 30 திகதியும் மருதனார்மடத்தில் இயங்கும் யாழ். யூனியன் கல்லூரியில் அடுத்த மாதம் 8 ஆம் திகதியும் ஆரம்பமாக உள்ளன

இக் கருத்தரங்கிற்கு ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களை தவறாது பங்குபற்றும் படி வேண்டப்படுகின்றனர். இவர்களுக்குஉரியபடிவழங்கப்படும்.

## பல்வேறு

மற்றவர் சுவாசித்தல், நோய் கண்டவர்களுடன் நீண்ட நாள் ஒட்டுறவு, ஊட்டச் சத்துள்ள உணவு கிடையாமை இத்தியாதிகளால் தொழுநோய் பரவும் அபாயம் உள்ளது என்றார் சுகாதார சேவைகள் பணிப்பாளர்பொ. இரத்தினசபாபதி.

### பொதுவான தொற்றுநோய்கள்

இலங்கையில் பொதுவாகக் காணப்படுகின்ற ஒருதொற்று நோய்மலேரியாவாகும். ஆனா இந்நோய் இப்பொழுது வடமராட்சி கிழக்கிலும், பச்சிலைப் பள்ளியிலும் பலருக்குத் தொற்றியுள்ளது

மலத்தீன் மருந்தைத் தெளித்து நுளம்புகளை அழிக்க வேண்டும். மலத்தீன் எமக்கு இப்போது கிடைப்பதில்லை. உணவுப் பண்டங்களை ஏற்றி வரும் குமண கப்பலில் நச்சுத் தன்மையுள்ள மலத்தீன் மருந்தைக் கொண்டு வரமுடியாது என்று அரச தரப்பில் சொல்லப்படுகிறது என்று செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது

யாழ்ப்பாணத்துக்குப் பிரத்தியேகமாக மலத்தீனைக் கொணர சிறிய கப்பல்தேவை. அந்த ஒழுங்குள் சம்பந்தப்பட்டவர்களால் எமக்குச் செய்து தரப்படவில்லை. யாழ் பிராந்தியத்துக்கு ஒரு பெட்டி 30 கிலோ எடை கொண்ட 600 பெட்டிகள் மாதமொன்

# பாரிய செலவில் அமைக்கப்பட்ட 'சமனெவெல' நீர் தேக்கம் உடைப்பு

பாரிய பொருள் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 'சமனெவெல' என்ற நீர்த் தேக்க அணைக்கட்டு உடைப்பெடுத்துள்ளதாய் தெரிய வருகிறது. இதனால் செக்கன் ஒன்றிற்கு 7000 லீற்றர் நீர் வெளியேறி வருகின்றது. அணையைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் நீரை வெளியேற்றுவதற்கான அனைத்து வாயில்களும் திறந்து விடப்பட்டுள்ளன. இருந்த போதும் கடந்த 22-ம் திகதி உடைப்பு ஆரம்பித்த போது 436.8 மீற்றர் உயரம் நிறைந்திருந்த நீர்த் தேக்கம் இதுவரை 434 மீற்றர் ஆக மட்டுமே குறைந்துள்ளது

நீர் வெளியேறுவதானது செக்கனுக்கு 500 லீற்றராகக் குறைக்கப்படாவிட்டால் நீர்த் தேக்கத்தினை உருவாக்குவதற்காகச் செலவிடப்பட்ட 1600 கோடி ரூபாவும் வீணாகிப் போய்விடும் என மின்சார சபை எச்சரித்துள்ளது.

நீர் வெளியேறுவதை தடுக்கும் நோக்குடன்,உடைப்பெடுத்த 22-ம் திகதி தொடக்கம் தினசரி 100 தொன் சீமெந்து உபயோகிக்கப்பட்டு வரும் போதும் நிலைமை மோசமடைந்தே செல்கின்றது என தெரியவருகிறது.

அதே சமயம் அணைக்கட்டில் உடைப்பெடுத்துள்ளதாய் அதிகாரிகள் கூறுவது பொய்யானது என விடயமறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. உடைப்பை சீர் செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த கிராம வாசிகள் கூறுவதன்படி 60 அடி உயரமும் 12 அடி அகல மானதுமான நிலக்கீழ் சுரங்கத்தின் ஊடாகவே நீர் வெளியேறுவதாய் தெரியவருகிறது.

இப்பகுதி நிலம் இறுக்கமானதல்ல, நிலத்தில் வெடிப்புகள் உள்ளன. எனவே பாரிய நீர்த்தேக்கம் அமைப்பது தவறானது என சோவியத் பூகோள அறிஞர்கள் எச்சரித்திருந்தபோதும் அரசு அதனை உதாசீனம் செய்து பிரிட்டன் மற்றும் யப்பான் நிறுவனங்களின் ஆலோசனைப்படியே நீர்த்தேக்கத்தை நிர்மாணித்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் அதே சமயம் இப்பகுதிகளை விட்டு 10,000 ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெளியேறியுள்ளனர். நீர்த்தேக்க பிரதேசம் தடை செய்யப்பட்ட வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

## யாழ்.

தினர் எனவே மீண்டும் இராணுவ அணிகளிடையே தலைமைத்துவத்தை நவீனமயப் படுத்தவேண்டியும் செயல்திட்டங்களை வடிவமைக்கவும், இராணுவ அறிவுரைகளை வழங்கும் பொருட்டும் மீண்டும் கூட்டுப்படை தலைமையகத்திடம் இராணுவ நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றார்

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள கூட்டுப்படைத் தலைமையகம் விமானப் படையின் பலத்தை முழு அளவில் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது எனவும் விமானப் படையினரின் இடைவிடாத தாக்குதல் மூலம் புலிகளின் மனத்திடத்தைப் பலவீனமுறச்செய்யலாம் எனக் கருதுவதாகவும் அவர் மேலும் சொன்னார்

அவர்மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மிக விரைவில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பாரிய இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என்றும் தெரிவித்தார் இத்தாக்குதல் நடவடிக்கைகள் எதிர்வரும் மழை காலத்திற்கு முன்பு நடத்தப்படலாம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்

## மேஜர் முரளி ஞாபகார்த்த

# விளையாட்டு விழா இறுதிப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டுவிழா போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட மேற்படி விளையாட்டு விழாவின் இறுதிப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகள் விபரம் வருமாறு:

15 வயது ஆண்களுக்கான தாச்சிப் போட்டியில் நவாலி மகாவித்தியாலயம்முதலாமிடத்தையும், கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், குடத்தனை அ. த. க. பாடசாலை மூன்றாமிடத்தையும்பெற்றன

15 வயது பெண்களுக்கான தாச்சிப் போட்டியில் மகாஜனாக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம்,, மட்டுவில் மகாவித்தியாலயம் ஆகியன முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளன.

கயிறிழுத்தல் போட்டியில் முதலாமிடத்தை புனித பரியோவான் கல்லூரியும், இரண்டாமிடத்தை மெமோறியல் கல்லூரியும், மூன்றாமிடத்தை புனித என்றியரசர் கல்லூரியும் பெற்றன.

17 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் நெல்லிபடி மகாவித்தியாலயம் முதலாமிடத்தையும், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி இரண்டாமிடத்தையும், புனித சம்பந்திரிசியார் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றன.

20 வயது பிரிவு வலைபந்தாட்ட போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி முதலாமிடத்தையும், மகாஜனாக் கல்லூரி வல்வை மகளிர் கல்லூரி ஆகியன முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளன

## பாதுகாப்பு

சென்றார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

வெல்லா வெளியில் கடந்த சனிக்கிழமை கொல்லப்பட்ட பத்து தமிழ் மக்களின் மரணம் குறித்துபாரபட்சமற்ற முறையில் விசாரணை நடத்தப்படும் எனஅவர் உறுதியளித்துள்ளார்

## ஜெரிசில்வா

ஏற்றுள்ளார். இதேவேளை ஆனையிறவுப் பகுதியிலும் வவுனியாவின் சில பகுதிகளிலும் தீவிர இராணுவ நடவடிக்கைகள் இடம் பெறலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

## வலி வடக்கில்

தல்கள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டது.

பலாலிமுகாமிலிருந்து ஏவப்பட்ட 15ற்கும் மேற்பட்ட எறிகணைகள் அளவெட்டி, பண்டத்தரிப்பு, விளான், சில்லாலை, வடலியடைப்பு,

## பலாலியில்

(கொழும்பு)

சிங்கப்பூரில்தொழில்வாய்ப்பு இல்லை, எனவே அங்கு தொழில் தேடிப் போகவேண்டாம்

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக பணிப்பாளர் திரு. சாமந்த ஜயசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிங்கப்பூர் வேலை வாய்ப்பு தொடர்பாக ஏமாற்றிய பல தொழில் முகவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், இன்னும் இது தொடர்பாக மக்களிடம் தகவல்கள் எதிர் பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

## மனிதநேயக்

மகளிர் விவகார அமைச்சின் ஊடாக விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. இப் பணிப்புரை கண்டிப்பாக நடைமுறைப் படுத்தப் படும் என்றும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

படுத்த சகலமுயற்சிகளும்மேற் கொள்ளப்பட்டுவருவதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு மரக்கறி சந்தைக்கு இங்கு இருந்து மரக்கறிவகைகள் அனுப்பப்படுவது தடைப்பட்டதால் கொழும்பில்மரக்கறிக்கானவிலை உயர்ந்து காணப்படுகின்றது.

## லெப்.

கடவுக்கான தண்டனை என்ன என்பது பற்றி இராணுவ நீதி மன்றம் சிபாரிசு எதையும் தெரிவிக்கவில்லை.

கடந்த வருடம் ஜூலை மாதத்தில் கொக்கட்டிச் சோலை பகுதியில் அறுபத்தியேழு தமிழர்கள் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டமை தெரிந்ததே.

இப் படுகொலை பற்றி விசாரணை நடத்திய நீதிமன்றம் விடுத்த அழைப்பாணைக்கு லெப், குடலிகம செவிசாய்க்க மறுத்திருந்தது குறிப்பிடத்தக்கது,

முறைப்படியான மரணவிசாரணை நடைபெறுவதற்கு முன்பே சடலங்களை அகற்றியமை, இனங்காண முடியாமற் சிதைத்தமை உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் லெப், குடலிகம மீது சுமத்தப்பட்டுள்ளன,

## உயிர்காக்கும்

சிக்னீன் கடந்த ஐந்து மாதங்களாக அனுப்பப்படவில்லை. அதனால் விசர் நாய்கடி அதிகரித்துள்ளது. விசர் நாய்கடி மருந்தும்மட்டுப்படுத்தப்பட்ட தொகைதான் வருகிறது. கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்குமாக 5,000 லீற்றர் அனுப்பப்பட்டது. அதில் யாழ்ப்பாணத்துக்கு 4000 லீற்றர் தரப்பட்டுள்ளது என்றார். சாதாரணமாக வயது வந்த ஒருவருக்கு 17 ஊசி போட 51 மில்லி லீற்றர் தேவைப் படுவதாகவும், இந்த மருந்தும் பற்றாக்குறையாக இருப்பதாகவும்தெரிவித்தார்.

ராட்சி கிழக்கிலும், பச்சிலைப் பள்ளியிலும் பலருக்குத் தொற்றியுள்ளது

மலத்தீன் மருந்தைத் தெளித்து நுளம்புகளை அழிக்க வேண்டும். மலத்தீன் எமக்கு இப்போது கிடைப்பதில்லை. உணவுப் பண்டங்களை ஏற்றி வரும் குமண கப்பலில் நச்சுத் தன்மையுள்ள மலத்தீன் மருந்தைக் கொண்டு வரமுடியாது என்று அரச தரப்பில் சொல்லப்படுகிறது என்று செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப் பட்டது.

யாழ்ப்பாணத்துக்குப் பிரத்தியேகமாக மலத்தீனைக் கொணர சிறிய கப்பல்தேவை. அந்த ஒழுங்குள் சம்பந்தப் பட்டவர்களால் எமக்குச் செய்து தரப்படவில்லை. யாழ் பிராந்தியத்துக்கு ஒரு பெட்டி 30 கிலோ எடை கொண்ட 600 பெட்டிகள் மாதமொன்றுக்குத் தேவை இவ்வாறு மேலும் தெரிவிக்கப்பட்டது.

நெருப்புக்காய்ச்சல் (ரைபொயிட்) நோயும் சிலருக்கு ஏற்பட்டுள்ளது. மக்கள் அகதி முகாம்களில் நெருக்கமாக வாழ்வது, அதனால் ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் நோய்க் கிருமிகள் தொற்றிய உணவுகளை உட்கொள்ளவதாலும் இந் நோய் ஏற்படுகின்றது.

வயிற்றுளைவு நோயும் காணப்படுகிறது வயிற்றோட்டத்தை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தி விடலாம். மற்றவர்கள் அச்சம் தெரிவிப்பது போல் இந் நோய் வாந்திபேதி அல்லது கொலரா அல்ல.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் மலேரியா, வயிற்றோட்டம் போன்ற நோய்கள் ஒன்றும் உக்கிரமாகப்பரவவில்லை மக்கள் பெரிதுபடுத்தி அஞ்சத் தேவையில்லை என்றார் டாக்டர் பொ. இரத்தினசபாபதி

புத்தூர்ப் பகுதியில் காச நோயாளரின் எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளதாகவும், ஊட்டச் சத்தற்ற உணவு இதற்கான ஒரு காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது

ளது என்றார்

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள கூட்டுப்படைத் தலைமையகம் விமானப் படையின் பலத்தை முழு அளவில் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது எனவும் விமானப் படையினரின் இடைவிடாத தாக்குதல் மூலம் புலிகளின் மனத்திடத்தைப் பலவீனமுறச்செய்யலாம் எனக் கருதுவதாகவும் அவர் மேலும் சொன்னார்

அவர்மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மிக விரைவில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பாரிய இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என்றும் தெரிவித்தார் இத்தாக்குதல் நடவடிக்கைகள் எதிர் வரும் மழை காலத்திற்கு முன்பு நடத்தப்படலாம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்

## 6 ஆம் ஆண்டிற்

அதிபர்களைச் சந்தித்து இப் பரீட்சைக்கான தமது விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

## பாதுகாப்பு

சென்றார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

வெல்லா வெளியில் கடந்த சனிக்கிழமை கொல்லப்பட்ட பத்து தமிழ்மக்களின் மரணம் குறித்து பாரபட்சமற்ற முறையில் விசாரணை நடத்தப்படும் என அவர் உறுதியளித்துள்ளார்

## ஜெரிசில்வா

ஏற்றுள்ளார். இதே வேளை ஆனையிறவுப் பகுதியிலும் வவுனியாவின் சில பகுதிகளிலும் தீவிர இராணுவ நடவடிக்கைகள் இடம் பெறலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலன்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

## பலாலியில்

பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை குடாநாட்டில் பரவலாக உலங்கு வானூர்தியும் சீ-பிளேன் ஒன்றும் நோட்டமிட்ட வண்ணமிருந்தன. ஆயினும் இவை எதுவிதமான தாக்குதலிலும் நேற்று ஈடுபடவில்லை.

யாலயம் முதலாமிடத்தையும், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி இரண்டாமிடத்தையும், புனித சம்பத்திரிசியார் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றன.

20 வயது பிரிவு வலைபந்தாட்ட போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி முதலாமிடத்தையும், மகாஜனாக் கல்லூரி வல்வை மகளிர் கல்லூரி ஆகியன முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளன

## வலி வடக்கில்

தல்கள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டது.

பலாலிமுகாமிலிருந்து ஏவப் பட்ட 15ற்கும் மேற்பட்ட எறிகணைகள் அராவெட்டி, பண்டத்தரிப்பு, விளான், சில்லாலை, வடலியடைப்பு, பொன்னாலை, சுளிபுரம் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன ஆயினும் இவற்றால் எதுவித உயிர்சேதங்களும் ஏற்படவில்லை. இத்தாக்குதல்களினால் நள்ளிரவுவேளை மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பு இடங்களில் தஞ்சமடைந்திருந்தனர். (ச)

---

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் அங்கீகாரமற்ற அபிவிருத்திகள் தொடர்பான

# அறிவுறுத்தல்கள்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் மாநகர சபையின் அங்கீகாரம்பெறாமல் தற்காலிக கொட்டகை அமைப்புக்கள் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான அமைப்புக்கள் நகரத்தில் ஏற்படுத்தப் பட்டு வருவதனால், நகரத்தின் சுகாதாரத்திற்கும், சுற்றுப்புறத்திற்கும் அசௌகரியத்தை ஏற்படுத்துவதுடன் தீவிபத்துச் சம்பவங்களை அதிகரிப்பதுடன் வீதிப்போக்குவரத்துக்கும் இடையூறாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

பெருமளவில் கட்டிடங்கள் அழிக்கப்பட்டமையினாலும், பொருத்தமான கட்டிடப்பொருள்கள் இல்லாமையினாலும் இவ்வாறான அமைப்புக்கள் தவிர்க்கமுடியாதவையாக இருந்தாலும் அவை ஓர் ஒழுங்கமைப்புக்குட்பட்டவையாகவும், மேற்கூறியவாறான இடைஞ்சல்களை முடிந்தளவுக்குக் கட்டுப்படுத்துவதாகவும் இருப்பதை உறுதிப்படுத்துமுகமாக, மாநகரசபையின் திட்டமிடல் பிரிவு பொருத்தமான ஆலோசனையையும், அங்கீகாரத்தையும் வழங்குகின்றது.

ஆகவே தற்காலிக கொட்டகை அமைப்புக்களை ஏற்கனவே நிறுவியவர்கள் உடனடியாக மாநகரசபையின் திட்டமிடல் பிரிவுடன் தொடர்புகொண்டு உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளவும். இவ்வாறான அமைப்புக்களை எதிர்காலத்தில் செய்ய உத்தேசித்திருப்பவர்கள் இதற்குரிய அனுமதியை முன்கூட்டியே மாநகர சபையின் திட்டமிடல் பிரிவில் பெற்றுக்கொள்ளவும்.

இதேபோன்று காணிகளுக்கு மண்போட்டு சீர்செய்யும் நடவடிக்கைகளுக்கும் இப்பிரிவின் அங்கீகாரம்பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

உரிய அங்கீகாரம் பெறாமல் மேற்கொள்ளப்படும் எவ்வித நிர்மாண வேலையும், காணி அபிவிருத்தியும், அங்கீகாரமற்ற நடவடிக்கை எனக் கருதப்பட்டு அதற்குரிய சேவைக்கட்டணம் அறவிடப்படுவதுடன் மேல் நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படும் என்பதையும் தயவுடன் அறியத் தருகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
28-10-1992

(சி-5327)

---

# உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்
## 28. 10. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6349

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:-
26-6320, 28-2511, 24-5679, 41-9855, 22-6746 24-922, 28-3029, 22-3938, 26-1343, 26-4139, 26-4323.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-
SLR-32, OXFAM-01, 41-1227, 27-5187, 24-3594, 24-5967, 28-4545, 28-7861, 27-5197.

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை
## நிர்மலன் [ரஜீவன் தியாகராஜா]

தாயின் மடியில்: 16-05-1974 தாயக மீட்பில்: 22-10-1990

திதி: 29. 10. 1992

வழுவாத குறியோடு சமருக்குச் சென்ற வேளை
நீங்கிவிட்டாய் நம்மை விட்டு
நீங்கவில்லை உன் நினைவுமட்டும்

பெற்றோர்,

ரஜீவன் வீதி,
கோப்பாய் தெற்கு இருபாலை.

(சி- 5319)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.